
பட்டு உடைகளை
றைக்கிளின் செய்வதிலும்
சாயம் போடுவதிலும்
மிகப்பெரிய ஸ்தாபனம்
SUNLIGHT DYERS & DRY CLEANERS
சன்லைட்
டையேர்ஸ் அன் றைக்கிளினேர்ஸ்
பெரியகடை (ராணித்தியேட்டருக்கு அருகாமை) யாழ்ப்பாணம்.



Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (29-10-65) இதழ் 259

விசுவாவசு ஐப்பசி 13 றஜபு பிறை 3 வெள்ளிக்கிழமை



நீடித்த பாவனைக்கு

சொனென் ஷீன் சொனென் ஷீன்
பெட்டிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-
துரை அன் கோ
23/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


ஐ. நா. பாதுகாப்பு சபை

# "2-ம் மோதலுக்கு பாக். தயாராகிறது"

## 620 தடவை யுத்த மீறல் செய்ததாய் இந்தியா புகார்

### பாக். இராணுவத்தால் காஷ்மீரை அசைக்கமுடியாது

—சாஸ்திரி

நியூயோர்க், அக். 28

**யுத்த நிறுத்தப் பகுதிநெடுகிலும் தனது துருப்புக்களை பாகிஸ்தான் முன்னால் நகர்த்தி வருவதாயும், இந்தியாவுடன் இரண்டாவது மோதலில் ஈடுபடும் நோக்கத்திற்காகவே இந்த ஏற்பாடு நடைபெற்று வருவதாயும் பாதுகாப்பு சபைத் தலைவருக்கு இந்தியா அறிவித்திருக்கிறது.**

பல்லாயிரம் ஊடுருவாளர்களை காஷ்மீரில் புகுத்த பல தந்திரங்களை பாகிஸ்தானியர் மேற்கொள்வதாயும் இந்தப் புகாரில் கூறப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டு மந்திரி சதார் சுவர்ண்சிங் இந்த உண்மைகளடங்கிய கடிதத்தை பாதுகாப்பு சபைத் தலைவருக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

கடந்த ஒருமாத காலத்தில் பாகிஸ்தான் 620 தடவைகள் யுத்த நிறுத்தத்தை மீறியிருக்கிறது என்றும் திரு. சுவர்ணசிங் தனது புகாரில் தெரிவித்திருக்கிறார்.

''லண்டன் டைம்ஸ்'' நிருபருக்கு திரு. பூட்டோ அளித்த பேட்டி ஒன்றை அவர் தன் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ''யுத்த நிறுத்தத்தை ஏற்றபோதிலும் இந்தியாவுடன் இரண்டாவது மோதல் இருக்கும் என திரு. பூட்டோ இந்தப் பேட்டியில் கூறியிருப்பதை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். இப்போது போர் நிறுத்த பகுதியில் நடைபெறும் சம்பவங்கள் இந்த மோதலுக்கு அறிகுறியாக விளங்குகிறது என்றும்தொடர்ந்து கூறப்பட்டுள்ளது.

''பாகிஸ்தானிய ராணுவ பலம் காஷ்மீரை அசைக்க முடியாது'' என இன்று ஜோத்பூர் வந்துசேர்ந்த பிரதமர்சாஸ்திரி ஒருபொது கூட்டத்தில் கூறினார். திரு. சாஸ்திரிக்கு இங்கு பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாதுகாப்பு சபையில் திரு. பூட்டோ வசைமாரி பொழிந்திருப்பதாய்க் கூறி, ''வசைமாரிகளால் அன்றி ஆயுதபலத்தால் நாம் பாகிஸ்தானுக்கு பதிலளிப்போம். பாகிஸ்தானின் ராணுவ வலிமையினால் காஷ்மீரை ஒருபோதும் பிடிக்க முடியாது'' என்றும் திரு. சாஸ்திரி கூறினார்.

## பீலிக்ஸுடன் எங்களுக்கு தொடர்பு இருக்காது

— சமசமாஜிகள்

பம்பலப்பிட்டி, வியா. ''பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகாவுக்கும் எங்களுக்குமிடையில் எவ்வித தொடர்பும் இருக்காது'' என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைமைப் பீடம் தெரிவித்துள்ளது.

பார்லிமெண்டில் திரு' பீலிக்ஸ் அண்மையில் மார்க்ஸிஸ்டுகளைப் பற்றிக் கூறிய கருத்தைத் தொடர்ந்தே தலைமைப்பீடம் இப்படியாகத்தெரிவித்துள்ளது.

டிசம்பரில் நடைபெறவிருக்கும் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் லங்கா சமசமாஜ்—ஸ்ரீலங்காகூட்டு முன்னணி அபேட்சகர்களை நிறுத்த சமசமாஜக் கட்சித் தலைமைப்பீடம் மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

லங்கா சமசமாஜக் கட்சியினர் 75 வீதம் இம்முறை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட விருப்பதாகவும்தெரியவருகிறது.

## "பிரிட்டன் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டும்"

### ரொடீஷியா பற்றி காண்டர்பரி அதி மேற்றிராணியார்

லண்டன், அக். 28

ரொடீஷியா ஒருதலைப் பட்ச சுதந்திரப் பிரகடனம் செய்தால் பிரிட்டன் பலாத்காரப் பிரயோகம் செய்வதைக் கிறிஸ்தவர்கள் ஆதரிக்கவேண்டுமென காண்டர்பரி அதிமேற்றிராணியார் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் மக்கள் தமது யோசனைக்கு ஆதரவளிக்க வேண்டுமென்ற அவரது வேண்டுகோளுக்கு எதிர்ப்பு இருப்பதாய்த் தெரிகிறது.

ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் கலகத்திற்கே வழிசெய்யுமென்றும், அங்கு சகல இன முன்னேற்றத்திற்கும் பாதுகாப்பளிப்பது முக்கியமென்றும் அதிமேற்றிராணியார் கூறினார்.

இதற்கிடையில் பிரிட்டிஷ் பிரதமர் ரொடீஷியாவில் பேச்சுகள் நடத்திக்கொண்டிருப்பதால் அங்கு பலாத்காரத்தைப் பிரயோகிக்க வேண்டுமென்ற 48 ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் தீர்மானத்தை இப்போது தர்மகர்த்தா சபையில் சமர்ப்பிப்பது சரியல்லவென ஐ. நா. பிரிட்டிஷ் பிரதிநிதி கூறியிருக்கிறார்.

## சீனாவின் போக்கு அபாயமானது

மாஸ்கோ, அக். 28

சீனா தனது நோக்கத்தை பிறநாடுகள் மீறி திணிக்க முயல்வதுபற்றி ரஷ்யப்பத்திரிகை பிராவ்டா எச்சரித்திருக்கிறது. இதனால் யுத்த அபாயம் ஏற்படும் என்றும் அது கூறியுள்ளது.

## "வவனியா விவசாயிகளுக்கு பயிர்நஷ்டஈட்டுப்பணம் வழங்குக?"

### மந்திரிக்கு எம். பி. கோரிக்கை

வவனியா, வியாழன் 1964-65-ம் ஆண்டுப் பெரும்போகச் செய்கையில் நஷ்டமடைந்த வவனியா விவசாயிகளுக்கு பயிர்காப்புறுதி நஷ்டஈட்டுப்பணம் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனஉணவு விவசாய மந்திரிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் வவனியா எம். பி திரு. டி. சிவசிதம்பரம் கேட்டுள்ளார்.

1964-ம் ஆண்டில்வவனியா விவசாயிகள் தொடர்ந்து மூன்று இடைப்போகச் செய்கையில் நஷ்டமடைந்துள்ளனரென்றும் 1964—65-ல் இப்பகுதியில் ஏற்பட்ட வரட்சியால் பெரும்போகச் செய்கை முற்றுகப் பாதிக்சப்பட்டதென்றும் சென்ற வருடம் டிசம்பர் மாதம் 22-ந் திகதி வீசிய புயலில் விவசாயிகளின் வீடுகளும் இதரபயிர்களும் நாசமாகி விட்டனவென்றும் திரு. சிவசிதம்பரம் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார் இம்முறை பெரும் போகச் செய்கைக்கு பயிர்காப்புறுதி நஷ்டஈட்டுப் பணமே விவசாயிகளுக்கு எல்லாமாக இருபதாகவும் எனவே இதை உடனடியாக வழங்க நடவடிக்கை யெடுக்கும்படியும் வவனியா எம். பி கேட்டுள்ளார்.

## முதல் எதிரிக்கு 7 வருடக் கடுழியம்; 2-ம் எதிரி விடுதலை

### பரந்தன் கொலைவழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி பரந்தன் கொலைவழக்கில்' முதல் எதிரிக்கு ஏழு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தும் இரண்டாம் எதிரியை விடுதலை செய்தும் வடபகுதி அசைஸ் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது.

1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ந் திகதி இரவு 8 மணிக்கு பரந்தனைச் சேர்ந்த கறுப்பண்ணன் முத்துச்சாமி என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த ஆப்பாக்குட்டி இராசரத்தினம், காசித்தம்பி நடராசா ஆகிய இருவரும் கொலை செய்ததாக இவ்வழக்கில் குற்றம் சாட்டட்டப்பட்டிருந்தது. இவ்வழக்கு சென்ற ஆறு தினங்களாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வந்தது. முதலாம் எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினத்தின் உதவியுடனும்திரு. தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானார். இரண்டாம்எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. வி, என். நவரத்தினம் திரு. தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகள் சார்பில் புரக்டர் ஏ. அந்தனி அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

நேற்றுக்காலை நீதிமன்றம் மீண்டும் கூடியபொழுது வழக்கறிஞர் திரு. நவரத்தினம் தொகுப்புரை நிகழ்த்தினர். ஒருவன்பின் நீதியரசர் தமது தொகுப்புரையை நிகழ்த்தினர். பின்னர் ஜூரிமார் ஒன்றரைமணி நேரம் ஆலோசனை செய்த பின் தமது முடிவைத் தெரிவித்தனர். இதை ஏற்றுக் கொண்ட நீதியரசர் முதலாம்எதிரிக்கு ஏழு வருடச் சிறைத்தண்டனை விதித்தும் இரண்டாம் எதிரியை விடுதலை செய்தும் தீர்ப்பு வழங்கினர்

### திருத்தம்

சென்ற செவ்வாய்க்கிழமை வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் 6-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த பரந்தன் கொலைவழக்கு விசாரணைச் செய்தியில் ஆறும் பந்தியில் இரண்டாம் எதிரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. வி. என் நவரத்தினம் தொகுப்புரைநிகழ்த்தினர் என்றிருப்பதற்குக் கீழ் உள்ள பந்தியில் பின்வருமாறு இருக்க வேண்டும்:-

''முனியம்மாவின்சாட்சியத்தைப் பலகாரணங்களால் நம்பவேமுடியாது. முனியம்மாவின் சாட்சியத்தை ஏற்றுக்கொண்டாலும், இறந்தவர் மீது இரண்டாம் எதிரி தாக்கியதாகக் கூறப்படுவதை நாம் சற்றுக் கவனிக்கவேண்டும். இரண்டாம் எதிரி தாக்கியதனால் ஏற்பட்ட காயம் சிறிது. எனவே அவர் கொலைசெய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் அவரைத் தாக்கவில்லை என்பது புலனாகிறது'' என்று திரு. நவரத்தினம் தமது தொகுப்புரையின் போது சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பேராசை இராவிடில் ஆயுதங்களுக்கே அவசியமிராது. சுரண்டல் ஆசை நீங்கிவிடின் ஆயுதங்கள் தாங்கமுடியாத பழுவென்பது உணரப்படும். ஒரு நாடு மற்றொன்றைச் சுரண்டுவதை நிறுத்தாவிடின் உண்மையான ஆயுத பரிகரணம் ஏற்படமுடியாது.

—மகாத்மா காந்தியடிகள்.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி 13 (29 10 65

# அதிக உணவு பயிரிடும் இயக்கம்

அதிக உணவு பயிரிடும் இயக்கம் இப்பொழுது ஆரம்பமாகியுள்ளது. இந்த இயக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற மந்திரிகள் உதவியும் ஊக்கமும் அளித்து வருகின்றனர். இரண்டாவது யுத்தகாலத்தில் இந்த இயக்கம் பெரும் உதவி அளித்தது. நாட்டின் இன்றைய நிலையில் இந்தஇயக்கம்அவசியமும் அவசரமுமாகும். இதை ஆரம்பித்த அரசாங்கத்தை பாராட்ட வேண்டும்.

அதிக உணவு பயிரிடும் இயக்கத்தின் முதல் நடவடிக்கையாக உணவு உற்பத்தியை அதிகரிப்பது பற்றிய கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. இவை நற்பயனளிக்கக் கூடியவை. கருத்தரங்குகளில் கலந்துகொள்வோர் தங்கள் கருத்துக்களையும் அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதுடன் திருப்தியடைந்துவிடாது உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான யோசனைகளைச் செயலில் நிறைவேற்ற முழு முயற்சி எடுக்க வேண்டும். இப்பொழுது உணவுப் பொருள்களுக்காக வருடாவருடம் 60 கோடி ரூபாய் வெளிநாடுகளுக்குச் செல்கின்றது. நிலவளமும் நீர்வளமும் ஆள்பலமும் நிறைந்த இலங்கையில் இவைகளைச் சரியாகப் பயன்படுத்தி உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரித்தால் வெளிநாடுகளுக்கு உணவுக்காகச் செலவிடப்படும் அறுபது கோடி ரூபாயையும் நாட்டின் இதர அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தி இலங்கையைப் பொன் கொழிக்கும் நாடாக்க முடியும். நாட்டின் பொருளாதார நிலை சீரடைந்து வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை முதலியவைகளும் தீர்ந்தால் இங்கு அமைதியும் ஐக்கியமும் நிலவும்.

ஜப்பானில் ஒரு ஏக்கருக்கு 100 புசல் நெல் விளைகிறதாம். இங்கு ஏக்கருக்கு 72 புசல் நெல் விளைச்சல் கண்டால் நாட்டின் அரிசித் தேவை பூர்த்திடைந்துவிடுமென கிளிநொச்சியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி தெரிவித்திருக்கிறார். விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாண்டால் நெல்விளைச்சலை அதிகரிக்க முடியுமென்றும் அவர் கூறுகிறார். ஜப்பானியமுறையை இங்குபின்பற்ற வேண்டுமென்று பல்லாண்டுகளாகக் கூறப்பட்டு வருகிறதே யொழிய அதைச் சரிவர எல்லோரும் பின்பற்றுவதற்கு முழுமுயற்சி செய்யப்படவில்லை. இங்கும் ஜப்பான் முதலிய வெளிநாடுகளிலும் விவசாயத்தில் பயிற்சிபெற்றவர்களையும் அரசாங்கம் சரியாகப் பயன்படுத்தவுமில்லை. விவசாயத்தில் பயிற்சி பெற்றவர்கள் பலர் வேலையில்லாமலும் மற்றும் சிலர் விவசாயத்துடன் சம்பந்தமே இல்லாத தொழிலிலும் உள்ளனர்

குறைந்த காலத்தில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய புதியரக நெல் தென்னிந்தியாவிலும் ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்புதியரக நெல் இலங்கைக்கும் ஏற்றதாவென்பதிலும் நமது விவசாய இலாகா கவனம் செலுத்துவது நல்லது.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு இஸ்ரேலில் பின்பற்றப்பட்டது போன்று இங்கும் ஒரு 'வாலிபர்படை'யை ஆரம்பிக்கவிருப்பதாக ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன சில தினங்களுக்கு முன் தெரிவித்திருந்தார். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் உணவு உற்பத்தியை அதிகரிப்பதுடன் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்க உதவும். இஸ்ரேலில் ஆரம்பிக்கப்பட்ட 'நகால்' வாலிபப்படை இஸ்ரேலிய இராணுவத்தின் ஒரு பிரிவாகவே இயங்கியது. சமாதான காலத்தில் உணவு உற்பத்தியிலும் யுத்தகாலத்தில் நாட்டின் பாதுகாப்பிலும் ஈடுபட்டது. இங்கு 'சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்காக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வைத்து 'சாப்பாடு' கொடுத்துவரும் ராணுவத்தினரை உணவு உற்பத்தித்துறையில் ஈடுபடுத்தினலே அதிக பயன் கிடைக்கும்.

அதிக உணவு பயிரிடும் இயக்கம் சரியான முறையில் வெற்றிபெறவேண்டுமானால் அரசாங்கம் திட்டமிட்டுச் செயலாற்றுவதுடன் மந்திரிகள் இப்பொழுது அளித்துவரும் ஊக்கமும் உற்சாகமும் நீடித்து நிலைபெறவும் வேண்டும்.

## மூன்று சதவீத மின்சாரம்!

இலங்கைக்குத் தேவையான மின்சாரத்தில் மூன்று சதவீதம் தான் இப்பொழுது கிடைக்கிறதென்றும், மிகுதி மண்ணெண்ணெய், விறகு முதலியவைகளால் தீர்க்கப்படுகிறதென்றும் மின்சார டைரக்டர் ஜெனரல் 1964ம் வருடத்துக்கான தமது நிர்வாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்துள்ள இந்த யுகத்தில்இச்செய்தி வேடிக்கையும், வேதனையும் அளிப்பதாகும்.

மின்சாரம் இன்று அத்தியாவசியத் தேவைகளில் ஒன்ருக உள்ளது. நாட்டின் தொழில் வளர்ச்சியடைவதற்கு மின்சாரம் மிகமிக அவசியம். இலங்கையில் நீர்வீழ்ச்சிகள் பல இருக்கின்றன. ஆறுகளும், நதிகளும் ஓடுகின்றன. இவற்றைச் சரியாகப் பயன்படுத்தினல் நீர்வீழ்ச்சி மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும். இதன் மூலம் நாட்டின் மின்சாரத்தேவையையும் பூர்த்திசெய்யமுடியும். நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்திசெய்வதன் மூலம் மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள்களுக்காக வெளிநாடு செல்லும் பெருந்தொகையான பணத்தையும் மிச்சப்படுத்தலாம். அண்டை நாடான இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பின்னர் எண்ணெய் வயல்களும் கண்டுபிடிக்கப்பட்டு, நீர்வீழ்ச்சிகளிலிருந்து பெருமளவு மின்சாரமும் உற்பத்திசெய்யப்படுகிறது. வடபகுதியில் எண்ணெய்ப் படிவங்கள் இருப்பதாக வெளிநாட்டுநிபுணர் கருத்துத் தெரிவித்திருந்தும் கூட அதற்கான ஆராய்ச்சி முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. மகாவலி கங்கையைத் திருப்பும் திட்டம் மேற்கொள்ளப்பட்டால் நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுமெனத் தெரிகிறது. எண்ணெய்ப் படிவங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்வதுடன் நீர்வீழ்ச்சியிலிருந்து அதிக மின்சாரம் உற்பத்திசெய்வதற்கும் தேசீய அரசாங்கம், வெளிநாடுகளின் உதவியுடனாவது துரிதமாகச் செயல்பட வேண்டும்.

# 'வேலையிருந்தும் நமது இளைஞர் வெட்கப்படுகின்றனர்''

## கோப்பாய் எம். பி. கருத்து

உடுப்பிட்டி, வியா.

''பாராளுமன்ற ரீதியாக எமது இயக்கம் நமது உரிமைகளை எதிர்ப்பவர்களை விழுத்துவதிலும் உரிமைகளைக் கொடுப்பவர்களை ஆதரிப்பதுமாகவே இருந்துவருகிறது. மொழிப்பிரச்னை பிரதேச சபைப் பிரச்னை என்பன யு. என். பி.யுடன் செய்துகொண்ட உடன்பாட்டில் இருக்கின்றன. நமது போராட்டம் இப்போது சிறிது மந்தகதியில் இருப்பினும் தேவையான போது எழுச்சி ஏற்பட்டே தீரும். விடுதலை இயக்கங்கள் காலத்திற்குக் காலம் தீவிரமாகவும் மசோர்வாகவும் இயங்குவது வழக்கம். நாம் தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்துநின்ருலும்போராட்டம் போராட்டமே நமது உரிமைகள் கிடைத்தால் அப்புறம் விடுதலை இயக்கமே தேவையில்லை முழு உரிமைகளையும் மற்றவர்கள் தருவதற்கும் நம்மவர்கள் விடமாட்டார்கள். எதற்கும் இக்காலத்தில் இளைஞர் அணிதான் முக்கியமானது. தமிழ் இளைஞர்கள் சுதந்திரமாக இயங்கப் பழகவேண்டும்''

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு சி. கதிரவேலுப்பிள்ளை நெல்லியடி கேணியடியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி வாலிப முன்னணிக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வாலிப முன்னணித்தலைவர் திரு. ஜே. செல்வநாயகம் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மேலும் கூறியதாவது:-

இப்போதைய அரசாங்கத்திடமிருந்து நிலம், சிறுகைத்தொழில் வசதிகளைப் பெறக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கஉத்தியோகம் அடிமை உத்தியோகம். ஒற்று ஓர் இனம்சுதந்திரமாகவாழமுடியாது சுதந்திரத்திற்குமனமில்லாதவர்கள் தான் அடிமை வாழ்வை விரும்புகிருர்கள். சுதந்திர உணர்ச்சி உடம்போடு வரவேண்டும். ஆபிரகாம்லிங்கன் அமெரிக்க நீக்ரோ மக்களுக்குச் சுதந்திரம் கொடுக்க முன்வந்தபோது அந்த அடிமைகளே சுதந்திரத்தை மறுத்தார்கள். தாமாகவே உழைத்து உண்ண அவர்கள் பயந்தார்கள். அதுபோலவேதான் நமது மக்களும்.

மேல்நாடுகளில் அதிகம் படித்தவர்கள் ஆக்கத்துறையிலும் உற்பத்திகளைப் பெருக்குவதிலும் ஈடுபடுவார்களேதவிர அரசாங்க உத்தியோகத்தை விரும்பமாட்டார்கள்,

நமது படித்த இளைஞர்கள் விவசாயம், சிறுகைத்தொழில்கள் முதலிய ஆக்கத்துறைகளில் ஈடுபடவேண்டும். நமது யாழ்ப்பாணத்து மக்கள் ஆலயங்களில் திருவிழாக்களையும், கலியாண வீடுகளையும், அந்திமக்கிரியைகளையும் அதிகப் பணம் செலவழித்து வெகு ஆடம்பரமாகச் செய்வார்கள். ஆனல் சிறுகைத்தொழில்களில் இப்பணத்தைப்போட்டு வாலிபருக்கு வேலை கொடுத்து நாட்டு உற்பத்தியைப் பெருக்கமுன்வரமாட்டார்கள்.

### இங்கு வேலையில்லையா?

வேலையில்லாத்திண்டாட்டம் என்று கூறுகிருர்கள். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் வேலையில்லாத்திண்டாட்டமே கிடையாது. வேலை செய்யத்தான் ஆளில்லை. காரணம், இங்கு வந்து குழாய்கள் பூட்டவும் மின்சார வயர்கள் திருத்தவும், வீதிசெப்பனிடவும் தென்பகுதியிலிருந்தே தொழிலாளிகள் தருவிக்கப்படுகிருர்கள். அவர்கள் அதிக சம்பளமும் பெறுகிருர்கள். ஆனல் நமது மக்கள் இவ் வேலைகளைச்செய்ய வெட்கப்படுகிருர்கள், பின்பு வேலையில்லை என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

தமிழ் ஆசிரியர்களின் சுயநலத்தால் இன்று தென்னிலங்கையில் 80 தமிழ் பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. இக்காரணத்தால் எதிர்காலத்தில் 1000 தமிழர்களுக்கு ஆசிரியர் உத்தியோகம் இல்லாமல் போய்விட்டது. ஸ்ரீலங்கா ஆட்சியின்போது குற்றங்கள் புரிந்த சாரணத்தால் வேலை நீக்கப்பட்ட பலர் இப்போது தேசிய அரசாங்கத்தில் தாம் இழந்தவற்றைப் பெற்றுக் கொடுக்கும்படி காலைப்பிடிக்கிருர்கள். இது நீதியா? அதிக ஆசிரியர்களுக்கு உள்ளூரில் இடமாற்றம் எடுத்துக்கொடுக்கும் எம். பி. தான் இன்று கெட்டிக்கார எம். பி.யாகக் கருதப்படுகிருர். வீடுகளுக்கு அருகில் இடமாற்றம் விரும்பி தென்னிலங்கையில் இருந்து ஓடிவரும் ஆசிரியர்கள் சமுதாயத்தின் விரோதிகள்.

கழகச் செயலாளர் திரு. செ. சுவர்ணராசா நன்றி கூறினர்.

# 50 ஆயிரம் ஆசிரியர்கள்

## இடமாற்ற விண்ணப்பம்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கையிலுள்ள ஆசிரியர்களில் அரவாசிப் பேர் இடமாற்றம் கோரி அனுப்பிய விணப்பங்கள் கல்வி இலாகாவில் குவிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொகையினர் இவ் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனராம். அடுத்த வருடம் முதல் இவ்விண்ணப்பங்களில் முக்கியமானவை கவனிக்கப்படுமென கல்வி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## நாடும் நடப்பும்

எம். ஜி. ஆர். என்னத்துக்காக இங்குவந்தார்? ஏன் இன்னும் திரும்பிப்போகாமலிருக்கிருர்?

''இந்தத் தீவிரவகுப்புவாதி மலைநாட்டில் தோட்டப் பகுதிகளிலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் சூருவளிச் சுற்றுப்பிரயாணம் செய்கிருர்... இந்தப் பயங்கர வகுப்புவாதியை ஏன் அரசாங்கம் இன்னும் நாட்டைவிட்டுவெளியேற்றுமாறு உத்தரவிடவில்லை...? மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, மாத்தளை ஆகிய இடங்களுக்குச் சென்று அவர் பொதுக் கூட்டங்களில் பேசியிருக்கிருர்... அவரது 'கலாச்சார விஜயம்' எப்பொழுது முடிவடையும் என்று எவருக்கும் தெரியாது... மட்டக்களப்புக் கூட்டத்தில் அவர்பேசிய பேச்சு ஆத்திரமூட்டுவதாகும். இந்த நாட்டுக்கு இதுவரை வந்த வெளியார் எவரும் இப்படிப்பேசியதில்லை.. ராமச்சந்திரனின் விஜயம் கலாச்சார விஜயமா, அரசியல் விஜயமா? என்பது வெளிவாகிவிட்டது... மட்டக்களப்பிலும் மற்றும் இடங்களிலும் அவர் பேசிய பேச்சுஅவர்''கலாச்சாரவிஜயம்' என்ற போர்வையில் முக்கியமான 'அரசியல் தூது' வந்திருப்பதையே காட்டுகிறது. இலங்கையில் அவரது நடமாட்டங்களை தேசாபிமானமுள்ள மக்கள் ஒவ்வொருவரும் பொறுப்புடன் அவதானிக்க வேண்டும்... எங்கள் நாடு எப்படி ஆளப்படவேண்டுமென்பதற்கு தென்னிந்தியாவிலிருந்துஎங்களுக்குஆலோசனை தேவையில்லை...''

என்ன விழிக்கிறீர்கள்! இப்படி யார் சொன்னது என்றுதானே. ''எத்த'' என்று ஓர் இடதுசாரிப் பத்திரிகை வெளிவருகிறதல்லவா? இம்மாதம் 27-ம் திகதி வெளிவந்த அந்தப் பத்திரிகையின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் 'ராமச்சந்திரன் அரசியலில் இறங்கிவிட்டார்' என்ற தலைப்பில் வெளிவந்த விஷ(ய)ம் தான் இது!

ஃ ஃ ஃ

''எம். ஜி. ஆரை சிலர் 'விற்றுப்பிழைத்து' விட்டார்கள். நாங்கள் ஆறுதலாக அவரைப் பார்க்க முடியாது போய்விட்டதே'' என்பது யாழ்ப்பாணத்திலுள்ள எம். ஜி. ஆர். அபிமானிகளின் குறை!

ஃ ஃ ஃ

கொழும்பில் உலக சுகாதார நிபுணர்கள் மலேரியா ஒழிப்பு மகாநாடு கூட்டி விவாதிக்கிருர்கள். இலங்கையில் மலேரியா ஒழிப்பு வெற்றிகரமாக நிறைவேறிவிட்டதாகப் பெருமை. மலேரியா நோய்க்கு மூல காரணம் நுளம்பு என்னும் கொசு. யாழ்ப்பாணத்தில் கொசுத் தொல்லையைப் பற்றிச்சொல்ல வேண்டியதில்லை மாநகரசபைக் கூடங்களிலும் கொசுக்கடி (கொசுவுக்கு அடி) கடுமைபற்றியும் அங்கத்தவர்கள் அடிக்கடி குறைகூறி விட்டனர். என்றாலும் கொசுத்தொல்லை மட்டும் நீங்கவில்லை. இங்கு மலேரியா முற்ருக ஒழிக்கப்பட்டு விட்டதாவென்பதை ஆராய்வதும் நல்லதே!

ஃ ஃ ஃ

இலங்கையில் யானை இனம் மறைந்து வருவதாகவும் யானைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கவலை தெரிவித்துஅதற்கானமுயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனல் ஆபிரிக்காவில் கென்யா என்ற நாட்டில் அடுத்தா

6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# “பாகிஸ்தானியர் உடம்பில் ஹிந்து இரத்தமே ஓடுகிறது”

## பூட்டோவின் பழிப்புக்கு முகம்மது சக்ளா கண்டனம்

புதுடில்லி, அக். 28

10 நூற்றுண்டுகள் பாரதத்தைத் தாங்கள் நாகரீகப் படுத்தியதாக, பாதுகாப்புச் சபையில் திரு. பூட்டோ கூறியதைப்பற்றி கல்வி மந்திரி சக்ளா குறிப்பிடுகையில், பாகிஸ்தான் இன்று சுதந்திர நாடாக இருப்பதற்கு, பாரதம் சுதந்திரம் பெற்றதே காரணம் என்பதை ஞாபகப்படுத்துவதாகக் கூறினார்.

அநேகமாக எல்லாபாகிஸ்தானியர்களும் ஹிந்துக்களாய் இருந்து இஸ்லாத்துக்கு மாற்றப்பட்டவர்கள். எனவே ஒவ்வொரு பாகிஸ்தானியனின் இரத்தத்திலும், ஹிந்து இரத்தம் ஓடுகிறது. பாரதத்தையும், அதன் கலாச்சாரத்தையும் திரு. பூட்டோ பழிப்பதால் அவர் தன்னையும், தன்முன்னோர்களையுமே பழிக்கிறார், திரு. பூட்டோவின் பேச்சு இரு நாடுகளின் உறவை சுமுகமாக்குவதற்குப் பதில் தீமையையே ஏற்படுத்தும்'' என்றும் சக்ளா கூறினார்.

அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் திரு. முகம்மது இஸ்மாயில், திரு. பூட்டோவின் பேச்சு இழிவானது, அநாகரிகமானது, பாதுகாப்புச்சபைஇதற்காகநிபந்தனையற்ற மன்னிப்பு கோரவேண்டுமெனக்கூறியிருக்கிறார்.

''திரு. பூட்டோவின் ஆபாசமான, மட்டரக வார்த்தைகளை அனுமதிப்பதன் மூலம் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவல்லரசுகள் ஐ. நா. வின் கண்ணியத்தைக் கைவிட்டு விட்டன'' என அலஹாபாத் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. ஆர். கே. நடு கூறினார்.

தேசிய வழக்கறிஞர்கள் சம்மேளனம் திரு. பூட்டோவின் பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கு மாறான பேச்சைக் கண்டித்து, இவ்விதச் செயல் மீண்டும் அனுமதிக்கப்படக்கூடாது என்றும், பாதுகாப்பச்சபை திரு. பூட்டோவின் இழி நடத்தைக்கு மன்னிப்புக்கோர வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

## கட்ச் நீதிமன்றம்

புதுடில்லி, அக். 28

யூகோஸ்லேவிய அரசியல் சட்ட நீதிமன்றத்தைச்சேர்ந்த நீதிபதி அலெஸ்பெப்லர் கட்ச் சம்பந்தமானமூவரடங்கிய சர்வதேச நீதிமன்றத்திற்கு இந்தியாவின் பிரதிநிதியாக இருக்க இணங்கியிருக்கிறார்.

பாகிஸ்தான், ஈரான் நீதிபதி ஒருவரை நியமித்திருக்கிறது. நீதிமன்றத்தின் தலைவர் ஒருவரை நியமிப்பதில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையே இணக்கம் ஏற்படாதுபோனால், யுதாண்ட் இந்தப் பதவிக்கான ஒருவரைத்தெரிவு செய்வார். (பி. டி. ஸி.)

## பாரம் தூக்கும் சாம்பியன்

தெஹ்ரான், அக். 28

1966-ம் ஆண்டுக்கான உலக பாரம்தூக்கும் சாம்பியன் போட்டி கிழக்கு ஜெர்மனியில் நடைபெறும் என உலக பாரம் தூக்கும் சம்மேளனம் அறிவித்தது. 1967 ம் ஆண்டுப் போட்டி டோக்கியோவில் நடக்கும்.

## ரொடீஷிய - ஆபிரிக்க

# தலைவர்களுடன் பிரிட்டிஷ் பிரதமர் பேச்சு

### படைபலத்தை உபயோகிக்க முடியாது என்கிறார்

ஸாலிஸ்பரி, அக். 28

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் நேற்று ஆபிரிக்க தேசியத்தலைவர்களான் என்கோமோ, சிட்டோலி ஆகியோர்களை ஸாலிஸ்பரியில் சந்தித்துப் பேசினார். முன்னாள் பிரதமர் திரு. கரிபீல்ட்டாடையும், அவர் சந்தித்தார்.

திரு. வில்சன் இதுவரை 70 பேரைச் சந்தித்திருப்பதாய்க்கூறப்பட்டது.

ரொடீஷியா ஒரு தலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்யுமானால் பிரிட்டன் துருப்புக்களை உபயோகிக்காது என திரு. வில்சன் ஆபிரிக்க தேசியத் தலைவர்களிடம் கூறியதாகத் தெரிகிறது.

தற்போதைய அரசியலமைப்புச்சட்டத்திற்கு தேசியத்தலைவர்களின் ஒத்துழைப்பை அவர் கோரினார் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் 48 ஆசிய-ஆபிரிக்கநாடுகள் ஐ. நா. தர்மகர்த்தா சபையில், ஒரு தலைப்பட்ச சுந்திரப்பிரகடனம் ஏற்பட்டால் அதை ஒடுக்க பிரிட்டன் படை பலத்தை உபயோகிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவரவிருக்கின்றன. இக்கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி திரு. ஏ. பி. பந்த் பேசியபோது ரொடீஷிய மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும் எனக் கூறினார்.

தற்போதைய அரசியலமைப்புச்சட்டத்தை பகிஷ்கரிப்பதை கைவிடுமாறு திரு. வில்சன் கோரியதை, ஆபிரிக்க தேசியத் தலைவர்கள்நிராகரித்து ரொடீஷியா பற்றி புதிய அரசியலமைப்பு மகாநாட்டைக் கூட்டுமாறு கேட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## ரஸ்ஸலுக்கு சூ பாராட்டு

பீகிங், அக். 28

''அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்ப்பதில் 91 வயதான பிரிட்டிஷ் தத்துவ ஞானி பேர்ட்ராண்ட் ரஸ்ஸல் காட்டிவரும் உணர்ச்சி'' குறித்து சீனப்பிரதமர் சூ-என்-லாய் புகழ் மாலை சூட்டியிருக்கிறார்.

வியட்னும்பற்றி திரு. ரஸ்ஸல் சமீபத்தில் லண்டனில் பேசிய விஷயங்களைப் பற்றி திரு. சூ கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார். (பி. டி. ஸி.)

## மேற்கிந்தீஸ் இவ்வாண்டு வராது

சென்னை, அக். 28

இவ்வாண்டு குளிர்காலத்தில் மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி இந்தியாவுக்கு விஜயம் செய்யமாட்டாது என்றும், இந்திய கிரிக்கெட் சபைக்கு வசதியானால், 1966-67-ம் ஆண்டு இந்திய சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்ளத் தயாராய் இருப்பதாயும் மேற்கிந்தீஸ் கிரிக்கெட் சபை அறிவித்திருக்கிறது. (பி. டி. ஐ.)

# பாதுகாப்பு சபை கூட்டம் மீண்டும் ஒத்திவைப்பு

## இந்தியாவராததால் உருப்படியான பலன் இல்லை என ரஷ்யா வாதம்

நியூயோர்க், அக். 28

நேற்றிரவு கூடிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதிகள் பங்குபற்றிக் கொள்ளவில்லை. இந்தோ-பாகிஸ்தான் சண்டைபற்றிச் சிறிது நேர விவாதத்திற்குப்பின் சபை மீண்டும் இன்றிரவுவரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்தியா சபைக்கு வராததால் சபை உருப்படியான எதையும் சாதிக்க முடியாது என ரஷ்யப் பிரதிநிதி டாக்டர் பெடரங்கோவ் கூறினார். ஐவரிகோஸ்ட், ஜோர்டான் ஆகிய நாடுகள் இதை எதிர்த்தன.

டச்சு, ஜோர்டான் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கவிருந்த நகல் தீர்மானம் கைவிடப்பட்டது. சோவியத் பிரதிநிதி திரு. பெடரங்கோவுடன் இதுசம்பந்தமாக அவர்கள் மேற்கொண்ட திரைமறைவுப் பேச்சுக்கள் தோல்வியுற்றதே இதற்குக் காரணம்.

இதற்கிடையில் நிரந்தரப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் திரு. பூட்டோவின் பேச்சு இந்திய மக்களை இழிவுபடுத்துவதாகவும், அவமதிப்பதாகவும், தூஷிப்பதாயும் இருந்ததாகக் கண்டனம் தெரிவித்திருக்கிறார். பாகிஸ்தான் சின்ன நாடு என்பதால் பாதுகாப்புச்சபை அதற்கு அனுதாபம் காட்ட வேண்டும் என்றும், 800 ஆண்டுகள் பாரதத்தை நாகரிகப் படுத்தியதாக அவர் கூறியதையும் கடிதம் மேலும் கண்டித்திருக்கிறது. காஷ்மீர்பற்றி சட்டம் ஏற்படுத்த ஐ. நா. வுக்கோ, பாதுகாப்புச் சபைக்கோ முன்போ, இப்போதோ அல்லது எதிர்காலத்திலோ எவ்வித உரிமையும் கிடையாதென்றும் திரு. பார்த்தசாரதி கூறியிருக்கிறார்.

இந்தோ-பாகிஸ்தான் தகராறில் தாய்லந்து குறுக்கிடாது என அந்நாட்டுத் தூதர் டில்லியில் கூறினார்.

இந்தோ-பாக். சண்டை பற்றி மலேஸியாவின் கொள்கை யுதாண்டின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டது என மலேஸியத் தூதர் டில்லியில் கூறினார்.

இந்தியா சுதந்திரமடைந்த அதே சமயத்தில் பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்தது என்றும், ஆனால் பாகிஸ்தான் மக்களுக்கு இன்னும் சுயநிர்ணயம் கிடைக்கவில்லையென்றும் கப்பல் மந்திரி திரு. ராஜ்பகதூர் பொதுக் கூட்டமொன்றில் பேசியபோது குறிப்பிட்டார். கிழக்கு வங்காளம், பக்தூனிஸ்தான், பலுசிஸ்தான் ஆகிய பகுதிகளுக்கு இன்னும் சுயநிர்ணயம் வழங்கப்படவில்லை என்றும், ஆனால் காஷ்மீருக்கு சுயநிர்ணயத்தைப்பற்றி பாகிஸ்தான் பேசுகிறதெனவும் அவர் கூறினார்.

## கேவல்சிங்

புதுடில்லி, அக், 28

பாகிஸ்தானிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. கேவல்சிங், பிரதம மந்திரி திரு. சாஸ்திரியை நேற்றுச் சந்தித்து, பாகிஸ்தான் அதிகாரிகள் மனிதத்தன்மையற்ற முறையில் தங்களை நடத்தியது குறித்து விபரங்களைத் தெரிவித்தார்.

## 40 யு. எஸ். விமானங்கள் சேதம்

சைகோன், அக். 28

டானுங் விமானத் தளத்தில் வியட்காங் கொரில்லாக்கள் நேற்று மோட்டார்ப் பீரங்கிகளை உபயோகித்து 18 அமெரிக்க ஹெலிகாப்டர்களை அழித்துவிட்டதாயும், மற்றும் 22ஐச் சேதப்படுத்தியதாயும் அறிவிக்கப்படடிருக்கின்றது.

## காஷ்மீரில் ஏராளமானோர் கைது

ராவல்பிண்டி, அக். 28

நேற்று ஸ்ரீநகரிலும் காஷ்மீரின் இதர பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கானோர் இந்தியப்பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## மத்திய ஜாவாவில் யுத்த நிலைமை

ஜாகர்த்தா, அக். 28

மத்திய ஜாவாவில் யுத்த நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், கிழக்கு ஜாவாவில் பரவலாகத் தலைதூக்கியுள்ள கம்யூனிஸ்ட் பயங்கர இயக்கமே இதற்குக் காரணமென்றும் அறிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதிகள் ஏராளமானோரைக் கொலைசெய்திருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

ஒரு நகரில் ஊரடங்குச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## அல்ஜீயர்ஸ் மகாநாடு

அல்ஜீயர்ஸ், அக். 28

ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் வெளிமந்திரிகள் திட்டமிட்டபடி இன்று கூடுகிறார்கள். உச்சிமகாநாட்டில் பங்குபற்ற 45 ஆசிய-ஆபிரிக்க நாடுகள் விருப்பம் தெரிவித்திருக்கின்றன. லைபீரியாவும், தாய்லாந்தும் கடைசியாக விருப்பம் தெரிவித்த நாடுகளாகும். இந்தியாவின் சார்பில் [illegible] ஸி. எஸ். ஜா வெளிமந்திரிகள் மகாநாட்டில் [illegible] கொள்ள வந்திருக்கிறார்.

## பேங்காக்கில் ஆசிய வங்கி

பேங்காக், அக். 28

உத்தேச ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமைக் காரியாலயம் பேங்காக்கில் இருக்கவேண்டுமென பல நாடுகள் விரும்புவதாய் வெளிநாட்டு மந்திரி திரு. தனட்கோமன் கூறினார். பேங்காக் நடுமையத்திலிருப்பதால் அதுதான் மிகப் பொருத்தமான இடம் என்றும் அவர் கூறினார்.

உள்நாட்டு மந்திரி ஜெனரல் பிரபார்ட் சருஸாதியன் நடத்திய மற்றோர் நிருபர் மகாநாட்டில் தாய்லாந்து அரசியல், பொருளாதாரஸ்திரமுடையதாய் இருக்கிறதென்றும், சர்வதேச விமானப் போக்குவரத்துக்கும், கப்பல் போக்குவரத்துக்கும் மத்திய கேந்திரமாய் இருக்கிறதென்றும், எனவே உத்தேச வங்கி பேங்பாக்கில் இருப்பதுபொருத்தமே என்றும் கூறினார்.

## சங்கரத்தை முருகமூர்த்திகோவில்

யாழ்ப்பாணம், வெள்ளி

சங்கரத்தை முருகமூர்த்தி கோவிலில் கந்தபுராணப் படிப்பும் இராக்காலங்களில் விசேஷ பூசை அபிஷேகமும் நடைபெறுகின்றது. தொடர்ந்து காலட்சேபம் நடைபெற்று வருகிறது. சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சூரன்போரும், மறுநாள் திருக்கல்யாணமும் நடைபெறும்.

அதேசமயம் அல்ஜீயர்ஸுக்கு சீன ராணுவ தூதுகோஷ்டியொன்று விஜயம் செய்திருக்கிறது.

## பரிசுத்த கன்னியரின் உலகத் தொடர்பு

### அதிகரிக்கவேண்டும் என யோசனை

ரோமாபுரி, அக். 28

பரிசுத்த கன்னியர் வெளி உலகுடன் இன்னும் அதிகத் தொடர்பு கொள்ளவேண்டும்என இரு கத்தோலிக்க கன்னிமாதாக்கள் நிருபர்கள் மகாநாடு ஒன்றில் கூறினார்கள்.

கத்தோலிக்கமத ஒழுங்குகளை நவீனப்படுத்தும் வத்திக்கான் திருச்சபை உத்தரவுபற்றி அவர்கள் பேட்டியளித்தார்கள்.

ஆசிரியர்களாகவும், தாதிகளாகவும் இருப்பதுடன் மட்டுமன்றி கிளப் விவாதங்கள் ஏழைகளுடன் ஒன்றுக வாழ்தல், பொதுமக்களுடன் எல்லாத் துறைகளிலும் சேர்ந்து வேலை செய்தல் போன்ற புதிய துறைகளிலும் அவர்கள் பிரவேசிக்க வேண்டும் என சகோதரி மேரி றூக் கூறினார்.

உலகத்துடன் தொடர்பு கொள்ள நாங்கள் ஆவலாயிருக்கிறோம் என சகோதரி கில்லிமைன் நிருபர்களிடம் கூறினார்.

## அபராதம்

ஊர்காவற்றுறை, வியா.

வேலணை கிழக்கு வாசியான எஸ். சிவராசா என்பவர் அதேஇடத்தைச் சேர்ந்த வி. எஸ் இராசரத்தினம் என்பவரைக் கூர்மையான ஆயுதத்தினால் தாக்கிக் காயப்படுத்தியதாக ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றை நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணையின் பின் நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு நூறுரூபாய் அபராதம் அல்லது மூன்று மாதம் சிறைவாசமும் கோடு கலையும் வரை மறியலும் விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு இலங்கை அறிஞர்கள் கட்டுரை

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் திகதிவரை மலாயாவில் நடைபெற விருக்கும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்காக இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளில் இலங்கையே முதலிடம் வகிக்கின்றது.

இந்தியா, இலங்கை, அமெரிக்கா, பிலிப்பைன், ஹொங்கொங், மலாயா, ஹாவாய் போன்ற பகுதிகளிலிருந்து இதுவரை பதிவு செய்துள்ள 79 அறிஞர்களில் இலங்கையிலிருந்து 43 அறிஞர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பதிவு செய்துள்ளனர் இருவர் பாராளுமன்ற அங்கத்தவராவர்.

ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பதிவு செய்துள்ள 7 பெண்மணிகளும் இலங்கையரே என்பது குறிப்பிடத்தக்கது. பெயர்கள் பின்வருமாறு: திருமதி கங்கேஸ்வரி கந்தையா, திருமதி மகேஸ்வரி மகாதேவா, திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன், திருமதி முத்துக்குமாரசாமி, திருமதி பத்மாவதி கனகரட்னம், திருமதி தனபாக்கியம் கணபதிப்பிள்ளை, திருமதி வேலாயுதபிள்ளை.

மகாநாட்டிற்குப் பொருளுதவி அளிக்கும் வகையில், மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய கல்விப்பிரிவை சேர்ந்த மாணவர்கள் அக்டோபர் 20, 21 ஆகிய இரு தினங்களிலும் தமிழ் நாடகம் நடாத்தினர்.

மலாயா, தமிழ்மொழிச் சங்கமும் தனது வருடாந்த இதழ் 'தமிழ்ஒலி'யின் விற்பனைமூலம் கிடைக்கும்பணத்திலிருந்து ஒரு பகுதியை மகாநாட்டிற்கு அளிக்க முன் வந்துள்ளது.

ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பதிவு செய்துள்ள ஏனைய இலங்கையரின் பெயர்கள் பின்வருமாறு: திருவாளர்கள் என். அல்லா பிச்சை, எஸ். ஆறுமுகம், ஏ. அசீஸ். வண. கு. டேவிட். ஏ. கனகரட்ணம், எம். கணபதிப்பிள்ளை, வி. கந்தவனம், கதிரேசு ராமச்சந்திரன், ஏ. ரகுமான். ரி. மூர்த்தி, எஸ். முருகவேள், வி. முத்துக்குமாரசாமி, வி. நடராசா, நாகலிங்கம் சுப்பிரமணியம், பி. நல்லரட்னம், க. நவசோதி, சி, ராஜசிங்கம், சி. வி. ராஜசுந்தரம், எஸ். எம். ராசமாணிக்கம், இ. ரத்தினம், கே. பி. ரட்னம், எஸ். ரவீந்திரன், கே. சபாநாதன், எஸ். பொன்னுத்துரை, ஆர். சிவலிங்கம், வி. கே. சிவப்பிரகாசம். கே. சிவத்தம்பி, பி. பரமேஸ்வரஐயர், எஸ். தனபாலசிங்கம், எஸ். தனசயஞ் ராஜசிங்கம். தேவராஜன், வி. எஸ். துரைராஜா, வி. வல்லிபுரம், க. ந. வேலன். எஸ். வேலாயுதபிள்ளை, நீ மே. யோ. வேதநாயகம், கே. விஜிதுங்க.

பட்டிருப்புப் பாராளுமன்றத் தொகுதி அங்கத்தவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் ''இலங்கைத் தமிழரும் அவர்களின் எதிர்காலப் பொருளாதாரமும்'' என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையினையும், கிளிநொச்சி பாராளுமன்றத் தொகுதி அங்கத்தவர் திரு. கா. பொ. இரத்தினம் ''தமிழரின் எண்ணப்பாங்கில் திருக்குறளின் செல்வாக்கு'', ''தமிழ்நாட்டில் இலக்கிய விமர்சனத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்'' என்னும் இரு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் பதிவுசெய்துள்ளனர்.

## உணவுஉற்பத்தி இயக்கம்

ஊர்காவற்றுறை, வியா. தீவுப்பகுதியில் உணவு உற்பத்தி இயக்கத்தைச் சிறந்த முறையில் சகல மக்களுக்கும் உற்சாகப்படுத்தும் நோக்கமாக ஆக வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. பற்றிக் கவனித்து வருகிறார்.

நாட்டின் உணவுப்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கிப் பசிப்பிணியைத் தீர்க்கும் பெரும் பணியில் உழைக்குமாறு தீவுப்பகுதி மக்களை காரியாதிகாரி கேட்டுள்ளார்.

உணவு உற்பத்தி இயக்கத்தின் ஓர் அம்சமாக 'வீட்டுத்தோட்டப் போட்டி'யை நடத்துவதற்கு தீவுப்பகுதி கிருஷிக போதனாசிரியரும், காரியாதிகாரியும் கூட்டாக முயற்சி எடுத்துள்ளனர்.

அச்சுவேலி, வியாழன் அச்சுவேலியிலுள்ள வியாபார ஸ்தலங்களில் கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக அதிக விலைக்குப் பொருட்களை விற்பதாகவும், வாங்கும் பொருட்களுக்குப் பற்றுச் சீட்டு கொடுக்க மறுப்பதையும் குறித்து அரசாங்க அதிபருக்கு மகஜரொன்றை பத்தைமேனி இளைஞர் முன்னேற்றக்கழகம் அனுப்பியுள்ளது.




அச்சுவேலி

## பிள்ளையார் கோயிலில் புராணப் படிப்பு

அச்சுவேலி, வியாழன் அச்சுவேலி உலவிற்குளப் பிள்ளையார் கோவிலில் கந்தஷஷ்டியை முன்னிட்டு மயூரகிரிபுராணம் தொடர்ந்து படிக்கப்பட்டுவருகின்றது.

விசேடபூசையும் ஆராதனையும் இடம்பெற்றுவருகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்
### 17-ம் பிரிவின்படியான அறிவித்தல்.

என் 1938 1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி, வடபிரதேசம், (மேல்) யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் இதன் அட்டவணை பத்தி I ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச்சபையின் கூட்டத்தை அந்த அட்டவணைப் பத்தி II ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி III ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி IV ல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. மாணிக்கவாசகர்
உள்ளூராட்சி உதவி அதிகாரி, வட பிரதேசம்
(மேல்) யாழ்ப்பாணம்.

1965 ம் ஆண்டு ஐப்பசி, 22 ல,
யாழ்ப்பாணம்.

அட்டவணை

| பத்தி I | பத்தி II | பத்தி III | பத்தி IV |
|---|---|---|---|
| கிராமச் சபையின் பெயர். | திகதி. | நேரம். | இடம். |
| கோப்பாய். | 6-11-65. | 10-00. மு. ப. | கிராமச் சபை அலுவலகம் கோப்பாய். |

309



உதைபந்தாட்டம்

## முதல் பிரிவில் ஹாட்லி; 2-ம் பிரிவில் மத்திய கல்லூரி வெற்றி!

யாழ்ப்பாணம், வெள்ளி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 1-ம், 2-ம் பிரிவுப் போட்டிகளில் முறையே ஹாட்லிக் கல்லூரியும், யாழ் மத்திய கல்லூரியும் வெற்றியீட்டின. முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவுப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் உற்சாகமாக விளையாடினார்கள். இடைவேளைக்குமுன் நடந்தபோட்டியில் பின்னணி வீரர்கள் ஹாட்லி வீரர்களை ஏமாற்றி தமது முன்னணி வீரரான சாம்பசிவத்திடம் பந்தைக் கொடுத்துத் தொடர்ந்து அவ்வீரர் மின்னல் வேகத்தில் அதைக் கோலுக்குள் உதைத்துத் தள்ளினார்.

ஹாட்லி வீரர்கள் கோல் போடுவதற்கு பலமுறை முயற்சித்தபோதும் யாழ் மத்திய கல்லூரி கோல்காப்பாளரிடம் அது பலிக்கவில்லை. இடைவேளையின் போது மத்தியகல்லூரி மாணவர்கள், ஹாட்லி வீரர்களை ஒருகோலும் அடிக்கவிடாத வகையில் தடைசெய்துதாம் ஒருகோல் பெற்றிருந்தனர். இடைவேளைக்குப் பின் நடந்த போட்டியில் ரசிக்கக் கூடியவகையில் இருகோஷ்டிக்கும்பலத்தபோட்டி இடம் பெற்றது. இப்போட்டியில் யாழ் மத்தியகல்லூரி ஹாட்லியை 1—0 கோலால் தோற்கடித்தது.

1-ம் பிரிவுக்கான போட்டியில் ஹாட்லி வீரர்கள் அபாரமாக விளையாடினர். மத்தியகல்லூரி வீரர்கள் திறமையுடையவர்களாக இருந்தும் இப்போட்டியில் "கோட்டை" விட்டுவிட்டார்கள். இது அவர்களின் துரதிர்ஷ்டமோ? ஹாட்லி வீரர்கள் படிப்படியாக கோல்களை வெளுத்துவாங்கினார்கள். முன்னணி வீரர்களின் விளையாட்டு பாராட்டத்தக்க விதத்தில் அமைந்திருந்தது. யாழ் மத்திய கல்லூரியின் முன்னணி வீரரான அமலசீலன் நன்றாக விளையாடினார். ஹாட்லி வீரர்கள் இடைவேளைக்கு முன் 2 கோல்களும் இடைவேளைக்குப் பின் ஒரு கோலும் போட்டு 3—0 கோல்களால் யாழ் மத்திய கல்லூரியைத் தோற்கடித்தனர். ஹாட்லி மைதானத்தில் நடைபெற்ற இரு போட்டிகளுக்கும் திரு. பாலசுப்பிரமணியமும், திரு. எஸ். ரி. தேவாவும் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

## 6—0 கோல்களால் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் கனகரெத்தினம் மகாவித்தியாலய கோஷ்டிக்கும் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம் உடுப்பிட்டி அ. மி. கல்லூரியை வெற்றியீட்டியது. இடைவேளைக்கு முன் நடந்த விளையாட்டில் கனகரெத்தினம் மகாவித்தியாலயக்கோஷ்டியே முதலில் ஒரு கோலைப்போட்டது, இக் கோஷ்டியின் சிறந்த வீரரான ஜெகநாதன் இந்தக் கோலை மிகவும் துரிதமாக உதைத்தார். அதையடுத்து முன்னணிவீரர் இம்மனுவேல் ஒரு கோலைப் போட்டார்.

இடைவேளையின் போது கனகரெத்தினம் மகாவித்தியாலய வீரர்கள் எதிர்க் கோஷ்டியை ஒரு கோலும் போடாமல் செய்து மூன்று கோல்கள் பெற்றிருந்தார்கள். இக்கோஷ்டியின் பின்னணி வீரர் சில்வஸ்ரர் எதிர்க் கோஷ்டியினர் கொண்டுவரும் பந்துகளை ஒரேஅடியில் திருப்பிக் கொண்டிருந்தார்.

இடைவேளைக்குப்பின் கனகரெத்தினம் மகாவித்தியாலயக் கோஷ்டியின் முன்னணி வீரர்களான மகேந்திரன், மரியகுமார் மேலும் 3 கோல்களை தள்ளினார்கள். போட்டிமுடிவில் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம் 6 0 கோல்களால் வெற்றியீட்டியது. உடுப்பிட்டி அ மி. கல்லூரி மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு. கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

### கைத்தொழில் அபிவிருத்தி

உங்கள் கைத்தொழில் எந்த வகையைச் சார்ந்தது? எந்தவகையாயினுஞ் சரி அதுசம்பந்தப்பட்ட உற்பத்தி முறைகள்பற்றிய தொழில் நுட்ப ஆலோசனை தேவைப்படுகிறதா? அப்படியாயின் உடனடியாக எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

உங்கள் கைத்தொழில் அபிவிருத்திக்கு எவ்வித இயந்திரங்கள் தேவைப்படுகின்றன? எங்களுக்கு எழுதுங்கள்.

த. பெ. இல. 65
யாழ்ப்பாணம்.

1222

## சங்கீத வகுப்பு

திருநெல்வேலி பாரதி கலாமன்றத்தில்
ஐயாக்கண்ணு தேசிகர் அவர்களால்
நடத்தப்படும் சங்கீத வகுப்புக்கு 15-11-65க்கு முன்
விண்ணப்பிக்கவும்.

பாரதி கலாமன்றம்,
அம்மன் வீதி, திருநெல்வேலி.



நத்தார் - புத்தாண்டை
முன்னிட்டு

## மலிவு விற்பனை

1-11-65 முதல்
நவீன வீட்டுதளபாடங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

## பாஷன் பேணிஷிங் பலெஸ்

(தளபாட மாளிகை)
5-7, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.




## கொழும்பு
### வெள்ளி 29 - 10 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 பக்திப்பாடல்கள், 8-00 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதசுரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி, 7-15 பாட்டு, 8-00 முஸ்லீம் நிகழ்ச்சி, 9-15 [illegible] [illegible] லாங்குழலும் கிளாரினெட்டும், 10-15 தேர்ந்தஇசை.

## வரி விளம்பரம்

### தேவை

விவசாய உத்தியோகஸ்தர்கள் தேவை. விவசாயத்தில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். காடுதுப்பரவுபடுத்துதல், உணவு உற்பத்தி செய்யும் முறைகளில் அனுபவம் அவசியம். விண்ணப்பிக்கவும்: இல. 150, சென்ற் யோசெப் வீதி, கிரூன்ட்பாஸ், கொழும்பு. 1188

மோட்டார் பாட்ஸ் கடைக்கு மனேஜர் தேவை. முற்பணம் 2000ரூபா. சம்பளம் 150 ரூபாய். விரும்பியோர் கீழ்க்காணும் விலாசத்தில் 30-10-65 காலை 10 மணிக்கு தராதரப்பத்திரங்களுடன் சந்திக்கவும். 101 கஸ்தூரியார்வீதி (வின்சர் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம். 1191

நிர்வாகமும் மேற்பார்வையும் செய்வதற்கு மனேஜர் உடனே தேவை. கூட்டுறவுப் பயிற்சி அல்லது கணக்கியலில் அனுபவம் வேண்டும் பிணைப்பணம் ரொக்கம் ரூ. 1000, உறுதி ரூ 2000. சம்பளம் தராதரத்திற்கும் அனுபவத்திற்கும் ஏற்ப வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பத்துடன் தலைவர், கரம்பன் ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை. நேரில் சந்திக்கவும். 1302

கைத்தறியில் தேர்ச்சி பெற்ற பெண்களும், தேர்ச்சி பெறவிரும்பும் பெண்களும் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். "சோபனா" இன்டஸ்றீஸ், 12 மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். 1200

### விற்பனைக்கு

மின்சக்தியால் இயங்கும் ஆட்டுக்கல் (தோசை, இட்டலி மா அரைப்பதற்கு) வீட்டுப் பாவனைக்கும், ஹோட்டல் பாவனைக்கும் உகந்தது. கடிதமூலம் தொடர்பு கொள்க: விளம்பர இல. 1185, மே/பா. ஈழநாடு. 1185

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். யாழ். விஜய புகைப்படங்கள் தொகைக்கும் சில்லறைக்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை. (பஸ்ராண்ட் முன்) றெயில்வே புக்ஸ்டால், யாழ்ப்பாணம். 1199

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரி-நல்லூர் வீதியிலுள்ள, நாயன்மார் வீதியில் 4 பரப்பு பனைமரங்கள் நிறைந்த வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு இ. சிவராசா, சியாமளாகம்ப, ஸ்ரேஷன் வீதி, யாழ்ப்பாணம். 1193

உடனடியான விற்பனை. CV 5775, CY 5751 ஒஸ்ரின் லொறிகள் விற்பனைக்குள்ளன. விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும். மு. கதிர்காமு, கரணவாய் தெற்கு கரவெட்டி. 1301

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். சரோஜாதேவி யாழ்ப்பாண விஜயத்தின்போது பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் "சித்ராலயா" ஸ்டூடியோவில் பெற்றுக் கொள்ளலாம். 1306

### கல்வி

ஜி. சி. ஈ. உயர், சாதாரண, கலை, விஞ்ஞான, துரித (Rapid Revision) மீட்டல் வகுப்புகள் 1-11-65ல் ஆரம்பமாகின்றன. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 1169

### காணவில்லை

M 818909, M 818910, C 197097, C 197098 I 117836 என்ற இலக்கங்களைக்கொண்ட 5 அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள் 24-10-1965-ந் திகதி மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த புகையிரதத்தில் காணவில்லை. இவைகளைக்கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். 1304

யாழ்ப்பாணம் சின்னக்கடை சிறிய புஸ்ப வர்த்தக சங்கக்கடைக்குச் சேர்ந்த 10 கூப்பன்கள் தவறிவிட்டது. அதைக்கண்டு எடுத்தவர்கள், ஈழநாட்டுக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 1303

[illegible]யாபாரம் பெருக
[illegible]ளம்பரம் செய்க

## இரவில் இன்னல் நேராமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்



பிரகாசம் மிக்கதும் நீடித்தகாலம் பாவிக்கக் கூடியதுமான லக்சபான டார்ச் பாட்டரிகளையே உங்கள் டார்ச்சில் பொருத்திப் பாவியுங்கள்

இறக்குமதி செய்யப்படும் ஏனைய ரக டார்ச் பாட்டரிகளைப் பார்க்கிலும் லக்சபான டார்ச் பாட்டரிகள் சிறந்த முறையில் பாவனைக்கு உகந்தவை. ஏனெனில் இவை உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றதாகத் தயாரிக்கப்படுகின்றன. மேலும் தயாரித்த புதிதிலேயே உங்களுக்கு கிடைக்கின்றன

இன்று கிடைக்கக் கூடிய சிறந்த டார்ச் பாட்டரி

லக்சபான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய வம்சாவளி

# பதிவுப் பிரஜைகளுக்கு தனி இடாப்பு வைக்கவேண்டும்

## செனட்டில் வரவிருக்கும் பிரேரணை

பம்பலப்பிட்டி, புதன்

இந்திய வம்சாவளிப் பதிவுப் பிரஜைகளுக்கென வேருன தேர்தல்இடாப்பு வைக்கப்படவேண்டுமென வும் அவர்களில் செனட்டுக்கும், பிரதிநிதிகள் சபைக்குமக ஐந்து பேருக்கு மேற்படாமல் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வகைசெய்யும் சட்டம் இயற்றப்படவேண்டுமென கோரும் பிரேரணை ஒன்றை நவம்பர் இரண்டாம்திகதி செனட்சபையில் கொண்டு வருவதற்கு செனட்டர் திரு. ஏ. தசநாயக்கா முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

1949-ம் ஆண்டுதொடக்கம் இற்றைவரை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படுபவர்களான இந்திய வம்சாவளியினர் யாவரினதும் பெயர்கள் இலங்கைப் பிரஜைகளுக்கான தேர்தல்இடாப்பில் இருந்து நீக்கப்படவேண்டுமெனவும் அவர்களுக்காக வேருன தேர்தல் இடாப்பொன்று தயார்செய்யப்படவேண்டுமெனவும் மேற்படி இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள பதிவுப் பிரஜைகள் ஐவருக்கு மேற்படாத பிரதிநிதிகள் செனற்றுக்கும் பிரதிநிதிகள்சபைக்கும் தெரிவுசெய்வதற்கேதுவாகச் சட்டம் இயற்றப்படவேண்டுமென வும் இவ்வவை அபிப்பிராயப்படுகின்றது என்பதே அந்தப் பிரேரணையாகும்.

"தோட்டப் பகுதிகளில் வசிக்கும் சிங்கள மக்களிடையேயும் இலங்கைப் பிரஜைகளினிடையேயும் ஏற்பட்டிருக்கும் கடும் காணித் தட்டுப்பாட்டுக்கும் தொழிலின்மைக்கும் தீர்வுகாணுமுகமாக விவசாய, காணி, தொழிற்சட்டங்கள் தாமதமின்றித் திருத்தப்படல் வேண்டுமெனவும் தேயிலை, ரப்பர், தென்னந் தோட்டங்களின் 10 சத விகிதப் பிரதேசத்தையும் பயிரிடப்படாத காணி முழுவதையும் அரசாங்கம் சுவீகரிக்க வேண்டுமெனவும் இலங்கைப் பிரஜைகளை-குறிப்பாக சிங்களவரைக் குடியேற்றுவதற்காக ஏறக்குறைய ஆயிரம் குடியேற்றங்கள் ஏற்படுத்தவேண்டுமெனவும் இக்குடியேற்றக்காரருக்கு பக்கத்துத் தோட்டங்களில் தொழில் தேடித்தரப்படவேண்டுமெனவும் இவ்வவை அபிப்பிராயப்படுகின்றது" என்ற பிரேரணைக்கான முன்னறிவித்தலையும் செனட்டர் தசநாயக்கா கொடுத்துள்ளார்


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) ராஜா (யாழ்ப்பாணம்) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

'நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''

எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென் கலர்)


# தலைலாமா-சாஸ்திரி பேச்சுவார்த்தை

புதுடில்லி, அக். 27

தலைலாமா பிரதமர் சாஸ்திரியை இன்று சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார். திபேத்தல் சீனாவின் ஆக்கிரமிப்புப் பற்றி இருவரும் பேசியதாகவும், இங்குள்ள திபெத்திய அகதிகளின் மறுவாழ்வு பற்றிப் பேசியதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இ. தொ. கா. செனட்டர்?

கொழும்பு, புதன்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஹட்டனைச் சேர்ந்த திரு. ஆர். யேசுதாசன் செனட்டராக நியமிக்கப்படலாமென நம்பப்படுகிறது. இவர் இ. தொ. காங்கிரஸின் மாவட்டப் பிரதிநிதியாவார்.

## செனட் சபைத் தலைவர் தெரிவு

பம்பலப்பிட்டி, புதன்

அடுத்த மாதம் இரண்டாம் திகதி செனட்சபைத் தலைவர் தெரிவு நடைபெறும்.

## கனிஷ்ட தராதரப் பரீட்சை

பருத்தித்துறை, புதன்

அகிலஇலங்கை தமிழ் ஆசிரியர்சங்கத்தினரால் நடாத்தப்படும் கனிஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சை நவம்பர்மாதம் 25-ம் திகதியன்று ஆரம்பமாகவிருக்கின்றது.

இப் ரீட்சைக்கு சுமார் 1600 மாணவர்கள்தோற்றுவார்கள் எனவும் இவ்வாண்டு புதிய பாடசாலைகள் பல கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்திருப்பதாயும் அறியப்படுகிறது.

## நகரசபைத் தேர்தல் நியமனப்பத்திரம் 30-ம் திகதி தாக்கலாகும்

பருத்தித்துறை, புதன்

டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பருத்தித்துறை நகரசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 30-ம் திகதி காலை தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

மொத்தம் ஒன்பது வட்டாரங்களில் சகல வட்டாரங்களிலும் போட்டிகள் நடைபெறுமெனத் தெரிய வருகிறது.

## மண்ணெண்ணை கமிஷன் அதிகரிப்பு

கொழும்பு, புதன்

பெட்ரோலியம்கூட்டுஸ்தாபனத்தின் ஏஜெண்டுகளுக்கு இனிமேல் ஒரு கலன் மண்ணெண்ணைக்கு 12 சதம் கமிஷன் கொடுப்பதென நிர்வாகத்தினர் முடிவுசெய்துள்ளனர். இப்பொழுது கலனுக்கு பத்தரைச் சதம் கமிஷன் கொடுக்கப்படுகிறது.

பாவிப்பாளர்களுக்குக்கட்டுப்பாட்டு விலைக்கே மண்ணெண்ணை கிடைக்க வழி செய்யும் முயற்சியாகவே இவ்விதம் செய்யப்பட்டுள்ளது.


REGAL--JAFFNA
NOW SHOWING!
NANCY KWAN
in
HONEYMOON HOTEL
(Panavision-M. G. M's Color)


# அதிக உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்

கொழும்பு, புதன்

பிரதமர் ஆரம்பித்துள்ள அதிக உணவு உற்பத்தி இயக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாகாணங்களின் அரசாங்க அதிபர்களுக்கு உள்நாட்டுமந்திரி திரு. டபிள்யு தகநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

அந்தந்த மாவட்டங்களில் உள்ள கிராமசேவகர்களைக் கூட்டி மகாநாடு ஒன்று நடத்துமாறும், கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகளை உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிராமசேவர்களுக்கு கட்டளையிடவேண்டுமெனவும் உள்நாட்டு மந்திரி அரசாங்க அதிபர்களைக் கேட்டுள்ளார்

கிராமப்பகுதிகளில் வீட்டு தோட்டங்களை வைத்து தங்கள்தங்கள் காய்கறிகளை அவர்களே உற்பத்திசெய்யக்கூடியவகையில் வீட்டுத் தோட்டப்போட்டிகள்நடத்தப்படவிருப்பதாக விவசாயப்பகுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மோட்டார் வாகனங்களிலிருந்து 'ஸ்ரீ' எழுத்தை அகற்ற கோரிக்கை

## கண்டி மாநகரசபையின் தீர்மானம்

கொழும்பு, புதன்

மோட்டார் வாகனங்களில் 'ஸ்ரீ' எழுத்தைப் பொறிப்பதை நிறுத்துமாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் இன்று கண்டி மாநகரசபையில் நிறைவேற்றப்பட்டது.

3—1 வாக்குகளால் மேற் கண்ட தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு சமூகமளித்திருந்து பதினொரு அங்கத்தவர்களில் 7 பேர்வாக்களிக்காது நடுநிலைமை வகித்தார்கள்.

"கிழக்கத்திய பண்பாட்டின்படி 'ஸ்ரீ' என்ற எழுத்துக்கு ஒரு தனிமதிப்பு அளிக்கப்பட்டுவந்தது. ஆனால் அந்த எழுத்தை நகரசுத்தி மோட்டார் வாகனங்களிலும் பொறித்து அந்த 'புனிதமான அடையாளத்'தின் மதிப்பு கெடுக்கப்பட்டுள்ளது. எனவே அந்த எழுத்தை இனிமேல் மோட்டார் வாகனங்களில் பொறிக்காதிருக்கவேண்டுமென இசசபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது'' என்ற தீர்மானத்தை திரு. ஸி. ரணசிங்கா சபையில் பிரேரித்தார். திரு. ஏ. தர்மசேன இந்தப் பிரேரணையை அனுவதித்துப் பேசும்போது 'ஸ்ரீ' என்ற அடையாளத்தை தகாத முறையில் பாவித்ததாலேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு அதிர்ஷ்டமும் செல்வாக்கும் குன்றியதெனவும் அதன் காரணமாகவே அந்தக் கட்சி தேர்தலில் தோல்வியுற்றதெனவும் குறிப்பிட்டார்.

திரு. பி. உயன்டனி தீர்மானத்தை எதிர்ந்துப்பேசுமையில் திரு. தர்மசேன பேசியதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், ஜனநாயகநாட்டில் அரசாங்க மாற்றம் பொதுஜன அபிப்பிராயத்தாலேயே ஏற்பட்டதெனவும் குறிப்பிட்டார்.

## சுகர்னே கூட்டிய மகாநாடு

கோலாலம்பூர், அக். 27

இன்று ஜனாதிபதி சுகர்னே இந்தோனேஷியாவிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகளை அழைத்து ஜாகர்த்தாவில் முக்கிய மகாநாடொன்றை நடத்தியதாக இந்தோனேஷிய செய்திஸ்தாபனம் தெரிவித்தது.

இநத மகாநாடடில் கம்யூனிஸ்கட்சி கலந்துகொள்ளவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது.

அடுத்த மாதம் பத்தாம் திகதி இந்தோனேஷியாவில் சதி ஒன்றை நடத்தவென தயாரிக்கப்பட்டு திட்டமிடப்பட்டிருந்ததாகவும் இந்த முயற்சியை பொலிசார் கண்டுபிடித்துள்ளதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விமான விபத்தில் 36 பேர் பலி

லண்டன், அக். 27

லண்டன் விமான நிலையத்தில் இன்று பிரிட்டிஷ் விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதால் அதில் பிரயாணம் செய்த 36 பேர்கள் மரணமானார்கள்.

## 12 உணவு கப்பல்கள்

கொழும்பு, புதன்

சுமார் 80,000 தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு 12 கப்பல்கள் கொழும்பு வந்து சேர்ந்துள்ளன.

சென்ற வாரத்திலும், வார இறுதியிலும் கொழும்பில் அடைமழை பெய்ததால், கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்கும் வேலை தாமதப்பட்டிருந்தது.

## நாடும் நடப்பும்

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

ஒன்று ஒன்றரை வருடங்களுக்குள் 5000 யானைகளைக் கொன்றேயாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாம். யானைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமேற்பட்டுள்ளதாம். இந்த யானைகளைக் கொல்லாவிட்டால் அவைகள் பட்டினியால் தாமாகவேமாண்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனையைக் கட்டித் தீனி போடுவதுமட்டு மல்ல ஆனையைக் கட்டாமலே தீனிபோடுவதும் கஷ்டம்தான்!

ஊர்சுற்றி

## இலங்கை கோஷ்டியும் ஐ. நா. கமிட்டிகளும்

கொழும்பு, வியா.

ஐ. நா. விலுள்ள இலங்கை தூதுகோஷ்டித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐ. நா. அரசியல் கமிட்டியில் இலங்கையின் பிரதிநிதியாக இருப்பார்.

ஐ. நா. விலுள்ள நிரந்தரப் பிரதிநிதி திரு. எம். எப். டி. எஸ். ஜயரத்ன ஐ. நா. விசேஷ அரசியல் கமிட்டியில் சேவைபுரிவார்.

பொருளாதாரக் கமிட்டியில் திரு. பொன்னம்பலமும், திரு, ஈ. எல். சேனநாயகாவும், கலாச்சார சமூகக் கமிட்டியில் திரு. ஒலிவர் வீரசிங்காவும், பட்ஜட் கமிட்டியில் திரு. ஜயரத்னவும், தர்மகர்த்தா சட்டக் கமிட்டில் திரு. ஆர். எஸ். எஸ் ஜெயவர்த்தனவும் இலங்கை பிரதிநிதிகளாகக் கடமையாற்றுவார்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டுஅக்டோபர் மாதம் 29-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org